தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 செப்டம்பர் 2003

22ஆம் ஆண்டு விழா

## 50% சிறப்புத் தள்ளுபடியில் நூல்கள் விற்பனை

தமிழ்ப் பல்கலைக்கழக 22ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில் 50 சதவீத சிறப்புத் தள்ளுபடியில் பல்கலைக்கழக வெளியீடுகளை விற்பனை செய்யும் தொடக்க விழா நூற்கண்காட்சி அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நூற்கண்காட்சியைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார். விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர் இராமதாசு, மொழிப்புலத் தலைவர் சீனிச்சாமி, சுவடிப்புலத்தலைவர் த.கோ. பரமசிவம், அறிவியல் புலத்தலைவர் டாக்டர் சே. பிரேமா, பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) ஆறு. இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தம் தலைமையுரையில், "தமிழ்ப் பல்கலைக்கழகம் இதுவரை 310க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளது. அரசு வெளியீடுகளாக 12 நூல்களை வெளியிட்டுள்ளது. ஆய்வு நோக்கில் வெளியிடப்பட்டுள்ள இந்த அரிய வகை நூல்கள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. தமிழகத்தில் எந்த ஒரு பதிப்பு நிறுவனமும் மேற்கொள்ளாத பதிப்புப் பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் துணிவுடன் மேற்கொண்டு தமிழுக்கு அழியாப் புகழைச் சேர்த்துள்ளது. இந்த வகையில் வாழ்வியல் களஞ்சியங்கள் 13 தொகுதிகள், அறிவியல் களஞ்சியங்கள் 12 தொகுதிகள், சங்க இலக்கியப்பொருட்களஞ்சியங்கள் 3 தொகுதிகள், கோயில் களஞ்சியங்கள் 4 தொகுதிகள், பெருஞ் சொல்லகராதி 4 தொகுதிகள் மற்றும் சட்டத்தமிழ் அகராதி ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். அறிவியல்தமிழ் எதிர்வரும் கல்வியாண்டு முதல் தொடக்கப்பள்ளி பாடத்திட்டத்தில் ஒரு பாடமாகச் சேர்க்கப்படவுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் தமிழுக்கென்று தனித்துறையே உள்ளது. இத்துறை மூலம் பல அரிய அறிவியல்நூல்கள், பொறியியல் நூல்கள், மருத்துவ நூல்கள் ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளது. குறிப்பாகக் கலைச்சொல்லாக்கத்துக்கு முன்னுரிமை அளித்து வேளாண், மண்ணியல் கலைச்சொற்கள், இயற்பியல் வேதியியல், கணிதவியல் கலைச்சொற்கள், பொறியியல் தொழில்நுட்பவியல் கலைச்சொற்கள், இயந்திரவியல் இயந்திரப் பொறியியல் கலைச்சொற்கள் போன்றவை உருவாக்கம் செய்யப்பட்டு நூல்களாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. நெய்வேலி என்.எல்.சி. சார்பில் சமீபத்தில்



நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளும் பங்கு பெற்றன. இதில் 2002க்கான சிறந்த பதிப்பகம் என்ற நற்சான்றும், பாராட்டும் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைக்குக் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆண்டும் புதிதாக 13 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த் அரிய வெளியீடுகள் பொதுமக்களைச் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஒவ்வோராண்டும் பல்கலைக்கழக ஆண்டு விழாவின்போது அரண்மனை வளாகத்தில் நூற்கண்காட்சி நடத்தப்படுகிறது. இதேபோல் இவ்வாண்டு இக்கண்காட்சி 11.09.2003இல் தொடங்கி நவம்பர்வரை நடைபெறுகிறது. இரு மாத காலம் நடைபெறும் கண்காட்சியில் அனைத்து நூல்களும் 50 சதவீத சிறப்புத் தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தச் சிறப்புக் கழிவு விற்பனைத் திட்டத்தைப் பொதுமக்கள், மாணவர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், தமிழ் ஆர்வலர்கள் பயன்படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளை அதிக அளவில் வாங்கிப் பயன்பெறவேண்டும்" என்று கூறினார்.

இக்கண்காட்சி ஏற்பாடுகளைப் பதிவாளர் (பொறுப்பு) திரு இரா.ஜெயக்குமார் அவர்கள், பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ஆறு.இராமநாதன் ஆகியோர் நன்கு செய்திருந்தனர்.

-இயக்குநர்(பொறுப்பு), பதிப்புத்துறை

# அறிவியல்தமிழ் புத்தொளிப் பயிற்சி

**(04.09.2003 - 24.09.2003)**




தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் அறிவியல்த்தமிழ் என்னும் பொருண்மையில் புத்தொளிப்பயிற்சி 04.09.2003 முதல் 24.09.2003 வரை நடைபெற்றது. இப்புத்தொளிப் பயிற்சியில் இந்திய விண்வெளி ஆய்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் பல்வேறு ஆய்வு நிறுவனங்களிலிருந்து துறை சார்ந்த வல்லுநர்கள் பங்கேற்றுக் கருத்துரைகள் வழங்கினர்.

இப்புத்தொளிப் பயிற்சியின் தொடக்க விழா பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் 04.09.2003 காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் அறிவியல்தமிழ்ப் புத்தொளிப்பயிற்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். துணைவேந்தர் தமது தலைமையுரையில், ''அறிவியல்தமிழ் என்பது தமிழில் உள்ள அனைத்துத் துறைகளையும் சார்ந்தது. தமிழில் கலைச்சொற்களைப் புதிதாக உருவாக்க வேண்டும். பழந்தமிழ், இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் உள்ள கலைச் சொற்களை எடுத்துப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் தமிழர்கள் அறிவியலின் பயனை முழுமையாகப் பெறுவர்.

முற்காலத்தில் குருகுலங்கள், சமணப்பள்ளிகள் போன்றவற்றில் மருத்துவம் மற்றும் மருந்து தொடர்பான கல்வியையும் போதித்தனர். அதில் அறிவியல் கலைச் சொற்கள் பலவும் உள்ளன. தற்போது நாம் பயன்படுத்தும் மருந்தாளுநர் என்ற சொல் பெருங்கதையில் இடம் பெற்றுள்ளது. மருத்துவத்தில் உடற்கூறு தொடர்பான பிரசவ வைத்தியம், ரண வைத்தியம், வைத்தியசாகரம் போன்ற பல நூல்களில் கலைச் சொற்கள் காணப்படுகின்றன'' என்றார்.

தொடக்கவிழாவில் மையக்கருத்துரை வழங்கிய பேராசிரியர் இராம.சுந்தரம் அவர்கள், ''10 ஆண்டுகளுக்கு முன் தமிழில் மருத்துவம், பொறியியல் தொடர்பான பாட நூல்களை எழுதத் தொடங்கினோம். அப்போது இவற்றுக்கான தமிழ்க்கலைச்சொற்கள் தேவையாயிருந்தன. சங்க இலக்கியங்கள் உள்ளிட்ட பழம் இலக்கியங்களைப் படித்து அவற்றிலிருந்து நிறைய கலைச்சொற்களைச் சேகரித்தோம்.

சங்க காலத்துக்குப் பின் வந்த சேர, சோழ, பாண்டிய, நாயக்கர் காலத்தில் தமிழ்ச்சொற்களுடன் வேற்றுமொழிச் சொற்களும் கலந்ததனால், பிந்தைய இலக்கியங்களிலும், தற்போதைய இலக்கியங்களிலும் சொற்கள் கிடைப்பது அரிதாகியது. புதிது, புதிதாகச் சொற்களை உருவாக்குகிறோம் என்ற பெயரில் இருப்பதை இழந்துவிடக்கூடாது.

பெரிய கோயில், கல்லணை போன்றவற்றைக் கட்டும்போது வழக்கிலிருந்த அறிவியல் நுட்பங்கள் அனைத்தும் அப்போதைய தமிழ்மொழியிலேயே இருந்தன'' என்றார். முனைவர் பெ.துரைசாமி நன்றி கூறினார்.

அறிவியல்தமிழ் புத்தொளிப்பயிற்சியின் நிறைவு விழா 24.09.2003 பிற்பகல் 2.30 மணிக்கு மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இவ்விழாவில் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் புத்தொளிப்பயிற்சிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரையாற்றினார். வளர்தமிழ்ப் புலத்தலைவர் முனைவர் அரோமா கு. சாம் அவர்கள் தலைமையுரை வழங்கினார். பங்கேற்பாளர்களின் சார்பாகத் திருமதி வேல்மயில், முனைவர் சிவபாதம் ஆகியோர் புத்தொளிப்பயிற்சியின் மதிப்பீட்டுரைகளை வழங்கினர். நிறைவு விழாவில் அறிவியல்தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு.அண்ணாதுரை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் செல்வராஜ் நன்றி கூறினார்.

-கு.அண்ணாதுரை, அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை

---

*கணிப்பொறி -*

## சான்றிதழ் வகுப்புகள்

வளர்ந்துவரும் புதிய உலகில் அனைவருக்கும் கணிப்பொறி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு இத்துறைகளில் தற்போதைய வளர்ச்சிக்கும் தேவைகளுக்கும் ஏற்பப் பயிற்சி வகுப்புகள் கணிப்பொறி அறிவியல் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலகளாவிய நிலையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் அலுவலகத் தானியக்கமாக்க மென்பொருள் தொகுப்பை எளிய வகையில் அறிமுகப்படுத்திப் பயிற்சி அளிக்க **''கணிப்பொறி பயன்பாடு''** என்ற பயிற்சி 10.9.2003 முதல் தொடங்கப்பட்டுள்ளது. இணையம், இணையப்பயன்பாடு, இணையத்தமிழ் மற்றும் இணையத்தில் வழியமைப்புகள் உருவாக்கப் பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் **''இணைய மொழிகள்''** என்ற பயிற்சி வகுப்பு தமிழ்ப் பல்கலைக்கழக 23 ஆம் ஆண்டு தொடக்க நாளான 15.09.2003 அன்று தொடங்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்புகளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் தஞ்சைக் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் சிலரும் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

-ச. பாஸ்கரன், கணிப்பொறி அறிவியல்துறை

## தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் வி-சாட் ஆன்டெனா கருவி

தமிழ்ப் பல்கலைக்கழக நல்கைக்குழு - இன்போநெட் (UGC-INFONET) அமைப்புத்திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் வி-சாட் (V-SAT) ஆன்டெனா கருவிவழி தகவல்ளைப் பெறப் பல்கலைக்கழக நல்கைக்குழு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.7.42 இலட்சம் வழங்கியிருக்கிறது.

பல்கலைக்கழக நல்கைக்குழு - இன்போநெட், எர்நெட் (ERNET) இந்தியாவுடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது. இத்திட்டம் வருகிற 2004 சனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்படவிருக்கிறது.

பல்கலைக்கழக நல்கைக்குழு இத்திட்டத்திற்காக 124 பல்கலைக்கழகங்களுக்கு நல்கை வழங்கியுள்ளது. அதில் முதற்கட்டமாக 50 பல்கலைக்கழகங்களுக்கு வி-சாட் ஆன்டெனா வழி இணைப்பு உடனடியாக வழங்கப்படவுள்ளன. அவற்றுள் தமிழ்ப் பல்கலைக்கழகமும் ஒன்று.

பல்கலைக்கழக நல்கைக்குழுவின் தன்னாட்சி நிறுவனமான அகமதாபாத்தில் உள்ள இன்பிளிப்நெட் மையத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கு ரூ.9.50 இலட்சம் வழங்கியுள்ளது.

இதில் நூலகத் தகவல் இணைய மையம் அமைக்கப்பெற்றுப் பன்னிரண்டு கணினிகள் வாங்கப்பெற்று நூல்கள் மற்றும் காலமுறை இதழ்கள் முன்தொகுதி பதிவு செய்யும்பணி நடைபெற்றுவருகிறது.

அவ்வாறு தற்பொழுது தொலைபேசி வழியாகப் பெறப்படுகின்ற இணையத் தொடர்பைக் காட்டிலும் பன்மடங்கு வேகமும், திறனும் கொண்ட வி-சாட் ஆன்டெனா கருவியினைப் பல்கலைக்கழக நல்கைக்குழு - இன்போநெட் அமைப்பின்கீழ் எர்நெட் இந்தியா நிறுவனம் விரைவில் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் நிறுவவுள்ளது.

இதனால் உலகத்தில் எந்த ஒரு சிறு பகுதியிலிருந்தும் கிடைக்கின்ற தகவல்களை இந்த மையத்தின் வழியாகப் பெறுவதன் மூலம் ஆய்வாளர்கள் தங்களுடைய ஆய்வுத் தலைப்புகளுக்கு ஏற்பப் புத்தம் புதிய தகவல்களைப் பெற்றுப் பயனடைய இயலும்.

## நடைபெற்ற நிகழ்வுகள்

செப்டம்பர் 2003இல்....

| | |
|---|---|
| 04.09.2003 | - அறிவியல்தமிழ்வளர்ச்சித்துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்கவிழா |
| 04.09.2003 | - மொழியியல்துறை - அறக்கட்டளைச்சொற்பொழிவு - முனைவர் செ.வை.சண்முகம் |
| 06.09.2003 | - அறிவியல்தமிழ்வளர்ச்சித்துறை - மறைமலை அடிகள் - முனைவர் இ.மறைமலை |
| 10.09.2003 | - மொழியியல் துறை - மொழி அரங்கம் |
| 11.09.2003 | - பதிப்புத்துறை-நூற்காட்சி-விற்பனை தொடக்கவிழா |
| 11.09.2003 | - இலக்கியத்துறை - திணையரங்கம் |
| 15.09.2003 | - மொழியியல்துறை - பிரான்சில் மொழியியல் ஆய்வுகள் - முனைவர் அ.முருகையன் |
| 17.09.2003 | - மொழியியல்துறை - மொழி அரங்கம் |
| 24.09.2003 | - அறிவியல்தமிழ் வளர்ச்சித்துறை - புத்தொளிப்பயிற்சி - நிறைவு விழா |
| 24.09.2003 | - அயல்நாட்டுத்தமிழ்த்துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்கவிழா |
| 27.09.2003 | - சுப்பராயலு அறக்கட்டளைக் கருத்தரங்கு நிருவாகம் பயிற்சிவகுப்பு |

## புத்தொளிப் பயிற்சி தொடக்க விழா




பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதி நல்கையுடன் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில் அயல்நாடுகளில் இந்தியவியல் ஆய்வுகள் (சிறப்பாகத் தமிழாய்வுகள்) எனும் பொருண்மையில் புத்தொளிப் பயிற்சியின் தொடக்கவிழா 24.09.2003 அன்று முற்பகல் 10.30 மணிக்குப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார். அவர்தம் தலைமையுரையில், ''20ஆம் நூற்றாண்டு சமூக, அரசியல் இலக்கிய மாற்றங்களுக்குத் தளம் அமைத்தது, ஏ.கே.ராமானுஜம், ஹார்ட் போன்றோர் சங்க இலக்கியங்கள் குறித்து பெருமைக்குரிய ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். எனவே அயல்நாடுகளில் தமிழியல் ஆய்வுகள் இன்று சிறந்தோங்கி நிற்கின்றன'' எனக் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் புத்தொளிப் பயிற்சியினைத் தொடங்கிவைத்து மையக் கருத்துரை வழங்கினார். அவர்தம் உரையில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ரஷ்யா, செக்கோஸ்லாவியா, போலந்து, ஹாலந்து, ஆஸ்திரேலியா, ஸ்பெயின், போர்ச்சுக்கல், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மியான்மர் உள்ளிட்ட நாடுகளில் இன்று தமிழ் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அயல்நாட்டினர் ஒரு தமிழ்ப் பாடலைப் பார்ப்பதற்கும் நாம் பார்ப்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. அவர்கள் திறனாய்வு நெறிநின்று அணுகுகின்றனர். தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல் கூறுகளின் பல்வேறு பரிமாணங்களை அவர்களால் வெளிக்கொணர முடிகிறது. நாம் புதிய கண்ணோட்டத்தில் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்மொழியையும் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்றார். விழாவின் தொடக்கத்தில் அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறையின் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் முனைவர் சா.உதயசூரியன் நன்றி கூறினார்.

–ஆ.கார்த்திகேயன். அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

நிருவாக அலுவலர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

இயக்குநர்,
பதிப்புத்துறை / அச்சகம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர்/துறை | | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|---|
| 1. | ச.கிரிஜா இலக்கியத்துறை | அரச அங்க இலக்கியங்கள் | 05-09-2003 |
| 2. | வை.இராசு அரியகையெழுத்துச்சுவடித்துறை | திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுவரர் கோயில்-ஓர் ஆய்வ | 08-09-2003 |
| 3. | த.அமுதா அரியகையெழுத்துச்சுவடித்துறை | கடிதங்கள் சுட்டும் மக்கள் வாழ்வியல் | 12-09-2003 |
| 4. | க.தனலெட்சுமி அரியகையெழுத்துச்சுவடித்துறை | தஞ்சை மராத்தியர் காலத் தமிழ் ஆவணங்கள் | 15-09-2003 |
| 5. | சி.அமுதா இலக்கியத்துறை | இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் பெரியாரின் சிந்தனைத் தாக்கம் . | 23-09-2003 |
| 6. | நா.சுவாமிநாதன் மொழிபெயர்ப்புத்துறை | Problems and Tangles in Translating D.H.Lawerence's Novel "Sons and Lovers" | 26-09-2003 |
| 7. | இரா.சாந்தி இலக்கியத்துறை | The Religion of Man in Gurudev Rabindranath Tagore and Arutperum Joti Ramalinga Vallalar | 29-09-2003 |

நீதிபதி மகராசன்

## அறக்கட்டளைச் சொற்பொழிவு

4.9.2003 வியாழன் மாலை 3.30 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையின் சார்பில் நீதிபதி மகராசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு "இலக்கியமும் நடையியலும்" என்ற தலைப்பில் நடைபெற்றது. மொழியியல் துறைத் தலைவர் முனைவர் எம்.சுசீலா அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்க, நிகழ்ச்சிக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைமை தாங்கி நீதிபதி மகராசன் அவர்களின் இலக்கியத் தொண்டின் விளைவாக விளைந்த நூல்களைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். கவிதை நடையைப் பற்றிக் கவின்மிகு கருத்துகளைக் கூறினார்கள். கம்பனின் கவிதை நடையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார்கள்.

சொற்பொழிவாற்றிய பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் இலக்கியத்தையும் நடையையும் இணைத்து ஆராய்ந்துரைத்தார். மொழியியல் அடிப்படையில் நடையியலை ஆய்வது சிறப்பாக அமையும்; இலக்கணம், இலக்கியத்தை ஆய ஏற்பட்டது என்றார். தொல்காப்பியரின் யாப்பு நடையியல் உத்திகளையும் மொழியியல் வளர்ச்சியால் தான் இலக்கியத்திறனாய்வு அறிவியல் பூர்வமாக மாறியது என்றும் விளக்கினார். இணைப்பேராசிரியர் ச.இராசேந்திரன் அவர்கள் நன்றி கூறினார்.

-எம்.சுசீலா, மொழியியல் துறை

### சிறப்புச் சொற்பொழிவு

15.09.2003 அன்று மாலை 11.30 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையில் பாரீஸ் உயர்கல்வி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் அ.முருகையன் அவர்கள் "பிரான்ஸில் தமிழ் ஆய்வுகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். அவர்கள் தமது உரையில் பிரான்ஸில் தமிழ்க் கல்வியின் நிலையையும், தமிழ்ப் பண்பாடுகள் முக்கியமாகத் தெய்வ வழிபாடுகள், நாட்டுப்புறப்பாடல்கள் அங்கு போற்றிப் பாதுகாக்கப்படுவதையும் விரிவாகக் கூறினார்கள். உரையைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில் ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் கி.அரங்கன், பல்கலைக்கழக ஆசிரியர்கள் முனைவர் ஆறு.இராமநாதன், முனைவர் பெ.மாதையன், முனைவர் எச்.சித்திர புத்திரன், பேரா.பூபதி, முனைவர் ச.இராசேந்திரன், முனைவர் எம்.சுசீலா மற்றும் ஆய்வு மாணவ, மாணவியர்கள் பங்குபெற்றனர்.

-எம்.சுசீலா, மொழியியல்துறை

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்